# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம்:11 | தமிழ் இலக்கியநயம் | நேரம்: 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

| சுட்டெண்:............................................................................ | 48 | T | I.II.III |
|---|---|---|---|

**பகுதி I இல் 1, 2 ஆகிய இரு வினாக்களுக்கும் பகுதி II இல் மூன்றாம் வினாவுக்கும் பகுதி III இல் 4,5,6,7 ஆம் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமென எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக**

## பகுதி –I

**01) 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக**

I. "ஆறலைக் கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை"

அ) இப்பாடலடி இடம்பெறும் நூல் யாது?

ஆ) இந்நூலை இயற்றியவர் யார்?

II. "சீ! நீ என்ன மனிதனைப் போலக் கேவலமாக நடந்து கொள்கிறாய்"

அ) இங்கு கேவலமானதாகக் குறிப்பிடப்படும் செயல் யாது?

ஆ) இப்பகுதி இடம்பெறும் சிறுகதையை எழுதியவர் யார்?

III. " வாழி அவன்தன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி
ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி"

அ) இங்கு மகவாகவும் தாயாகவும் உருவகிக்கப்படுபவை எவை?

ஆ) அவ்வாறு உருவகிக்கப்படுவதன் பொருத்தப்பாடு யாது?

IV. "தாமரை வதனம் சாய்த்துத்
தனு நெடுந்தரையில் ஊன்றி
மாமியார் குழுவில் வந்தான் ஆம் என மைந்தன் நிற்ப"

அ) இங்கு மைந்தன் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

ஆ) அவன் தலைகவிழ்ந்து நிற்பதற்குக் காரணமான செயல் எது?

V. "அறவோரை வணங்குகின்றோம் இல்லத்தலைவன் இல்லில் இல்லை. உங்களுக்கு விருந்தோம்பும் பாக்கியத்தை இழந்து நிற்கும் எங்களுக்குத் தயைகூர்ந்து அருள்புரிய வேண்டும்."

அ) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?

ஆ) விருந்தோம்பும் பாக்கியம் இழக்கப்பட்டமைக்கான காரணம் யாது?

(4X5=20 புள்ளிகள்)

**02) கீழ்க்காணும் பாடற்பகுதியை வாசித்துத் தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**

காலையிலே பனிகாயு முன்னே குளிர்
காற்றைக் கிழித்துமே ஓடுகின்றோம் - தொழிற்
சாலையிலே சங்கு ஊதுமுன்னே பசுந்
தங்கத்தளிரினைக் கிள்ளிடுவோம்.

kalvi.lk

வெண்டை விரல்கள் விறைத்திடினும் எங்கள்
மேனி குளிரில் நடுங்கிடினும் - இரு
கெண்டை விழிகள் பளபளக்கும் தளிர்
கிள்ளவோ கைகள் பரபரக்கும்.

பெண்ணுக்குக் கல்வி பெருந்தீது உரிமை
பேசிடிலோ அது பெருந்தவறு – என்ற
எண்ணம் படைத்தவர் மண்ணிற் புதைந்திட
எண்ணற் கரிய கலை படைப்போம்.

சாதி சமயச் சங்கறுத்துப் பெண்கள்
தாழ்வெனும் தீய போக்கொழித்து - இம்
மேதினியிற் புது மாற்றம் படைத்துப் பெண்
விடுதலைக் கீதம் இசைத்திடுவோம்.

I. மலையகப் பெண்களின் துயர்நிறைந்த வாழ்க்கை எவ்வாறு சித்திரிக்கப்படுகின்றது?

II. துயர்நிறைந்த வாழ்வின் மத்தியிலும் அவர்கள் தமது தொழிலிற் கொண்ட மதிப்பு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

III. மலையகப் பெண்களின் விடுதலை பெறும் விருப்பு எவற்றின் மூலம் புலனாகிறது?

IV. இச் செய்யுளிலுள்ள அணிகளை இனங்கண்டு விளக்குக.

V. இப்பாடலினூடாகப் புலப்படும் மலையக வாழ்வியல் அம்சங்கள் எவை?

(5X5=25 புள்ளிகள்)

## பகுதி – II

**03)**

**கீழ்க்காணும் உரைப்பகுதியினை வாசித்துத் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக**

ஹைக்கூ என்பதன் அர்த்தம் என்ன? என்ற கேள்விக்கு கேம்பர்ஸ் அகராதி “5,7,5 அசைகள் (Syllables) கொண்ட ஜப்பானியக் கவிதை என்று பதிலுரைக்கின்றது. எனினும் இந்த விளக்கத்தையும் தாண்டி ஹைக்கூ ஒரு அனுபவப் பகிர்வு, வியப்பில் ஆழ்த்தும் வீச்சு, இரசனையூட்டும் அழகு, சிந்தனை எழுப்பும் அலை, உணர்ச்சியை ஏற்றும் தூண்டியாக அமையும் ஆற்றல் மிக்க வடிவம், ஒரு மின்னல் அல்லது மின்மினி எனலாம்.

அனுபவத்தையும் உணர்ச்சியையும் பிறருக்குத் தரமுயல்வது தான் ஹைக்கூ. உண்மையில் கலை இலக்கியம் அனைத்தினதும் நோக்கும் இதுதான். கவிஞனோ, கலைஞனோ , ஓவியனோ தனக்குக் கிடைக்கும் அனுபவத்தை அப்படியே உணர்வு இழை அறுந்திடாதவாறு தன் சிருஷ்டியைப் பின்னி வாசகர்களுக்குப் பரிசளிக்கின்றான். வாசகர்கள் தமது அனுபவ வெளியுடன் இணைத்து, இரசித்து இன்புறுகிறார்கள் அல்லது துயருறுகிறார்கள். ஒரு கணப்பொழுதின் துயரை அல்லது மகிழ்வைப் பகிர்கிறது ஹைக்கூ.

கணப்பொழுதின் அனுபவமாக இருப்பின் அது கிளர்த்தும் சிந்தனைகளும் சம்பாசனைகளும் கேள்விகளும் அதிகம் வாசகமனசுக்கு ஒலி எழுப்பும். அதனால் ஹைக்கூ காந்தம் போல் இழுக்கும் மொழிநடையையும் பிரபஞ்சத்தின் அந்தரங்கங்களையும் காட்சிப்படுத்தும் தத்துவப் பார்வையையும் கொண்டுள்ளது எனலாம்.

kalvi.lk

பாஷோ (1644 - 1694) தான் மிகப்பெரும் ஹைக்கூக் கவிஞராகப் பேசப்பட்டவர். ஹைக்கூவுக்கு முழு வடிவம் கொடுத்து அதில் செழுமையைப் பாய்ச்சியவர் பாஷோ. கற்பனை வாதத்தில் மிதந்த ஹைக்கூவை அன்றாட வாழ்வின் யதார்த்த நிலமைக்கு இட்டுச் சென்றவரும் பாஷோ தான்.

01) ஹைக்கூவுக்கு கேம்பர்ஸ் அகராதி தரும் அர்த்தம் என்ன?

02) ஹைக்கூவின் சிறப்பியல்புகள் எவை?

03) 'கலை, இலக்கியம் அனைத்தினதும் நோக்கம்' என்று கட்டுரை ஆசிரியரால் குறிப்பிடப்படும் விடயம் எது?

04) ஹைக்கூ வரலாற்றில் பாஷோவின் பங்களிப்பு என்ன?

05) கட்டுரை ஆசிரியர் கையாண்ட உவமை, உருவக அணிகளை விளக்குக.

(5X5=25 புள்ளிகள்)

## பகுதி III

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.**

**04). 'எலியம்'** சிறுகதையில் அங்கதப்பண்பு வெளிப்படுமாற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

**05) 'தெளிவு'** எனும் சிறுகதையில் பாரூக்கின் வறுமையும் மைமூன் கிழவியினது பணத்தைத் திருடியதால் ஏற்பட்ட குற்ற உணர்வும் வெளிப்படுமாற்றை விளக்குக

(15 புள்ளிகள்)

**06) 'மென்மையே வாழும்'** என்ற கட்டுரையில் ஆசிரியர் தனது கருத்தை விளக்கப் பயன்படுத்தும் உத்திகளை உதாரணங்களுடன் விளக்குக.

(15 புள்ளிகள்)

**07) கிட்கிந்தைப் படலத்தில்**

1. இலக்குமணனின் குணவியல்புகள்
2. தாரையின் மதிநுட்பம்

என்பன புலப்படுமாற்றை விளக்குக.

(8+7= 15 புள்ளிகள்)

kalvi.lk

# இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019
# தரம் - 11 தமிழ் இலக்கியநயம் I,II,III
# புள்ளித்திட்டம்

*01)*

I. அ) பொருநராற்றுப்படை

ஆ) முடத்தாமக் கண்ணியார்

II. அ) குமரனை (மாடசாமியின் மகனைக்) கொல்ல முயன்றமை
ஆ) அகிலன்

III. அ) மகவு – சோழநாடு
தாய் - காவிரி ஆறு
ஆ) சோழநாடு வளமாக இருப்பதற்குக் காவிரி ஆறே நீர் வழங்குகின்றது.

IV. அ) இலக்குமணன்

ஆ) தாரை தலைமையிலான வாரை மகளிர் கூட்டம் முன்னால் வந்தமை

V. அ) காவற்பெண்டினால்

ஆ) கண்ணகியின் கணவனான கோவலன் மாதவியிடம் சென்றமை/ வீட்டில் இல்லாமை
(ஒருவரது பெயராவது சுட்டிக் கூறப்படவேண்டும்)

**02)** 1. பனிக்குளிரில் வேலைக்குச் செல்லல்
விரல்கள் விறைத்தல்
உடல் குளிரால் நடுங்குதல்
கல்வியறிவில் பின்தங்கி இருத்தல்

2. பனிகாயுமுன் வேலைக்குச் செல்லல்
சங்கு ஊதுமுன்னரே தேயிலைத் தளிர் கிள்ளல்
விரல்கள் விறைத்து உடல் நடுங்கினாலும் தளிர்கிள்ள விழிகள் பளபளத்தல், கைகள் பரபரத்தல்.

3. பெண் கல்வியை எதிர்த்தவர் மண்ணிற் புதைந்திடக் கலை படைத்தல்
உலகில் புதிய மாற்றம் படைத்தல்
பெண் விடுதலைக் கீதம் இசைத்தல்

4. **உவமை**
தங்கத்தளிர்
வெண்டைவிரல்
கெண்டை விழி
உருவகம்
சாதிச்சமயச் சங்கு

5. நேரம் அறிவிக்கத் தொழிற்சாலைச் சங்கு
தேயிலைத் தோட்டத் தொழில்

**03)** 1. 5,7,5 அசைகள் கொண்ட ஜப்பானிய கவிதைகள்

2. அனுபவத்தைப் பகிர்வது
   வியப்பில் ஆழ்த்துவது
   இரசனையூட்டுவது
   சிந்தனையைத் தூண்டுவது
   உணர்ச்சி ஏற்படுத்துவது
   ஒருகணப் பொழுதின் மகிழ்வை / துயரைப் பகிர்வது
   கவரும் மொழிநடை
   தத்துவப் பார்வை

3. அனுபவத்தையும் உணர்வையும் பிறருக்கு தர முயல்வது

4. மிகப் பெரும் பங்களிப்பு
   முழு வடிவம் கொடுத்து, செழுமையை ஏற்படுத்தியமை
   கற்பனை வாதத்திலிருந்து யதார்த்த நிலைக்கு இட்டு வந்தமை

5. உருவக அணிகள்
   வியப்பில் ஆழ்த்தும் வீச்சு
   இரசனையூட்டும் அழகு
   சிந்தனையை எழுப்பும் அலை
   ஒரு மின்னல் / மின்மினி
   **உவமை**
   காந்தம் போல் இழுக்கும் மொழிநடை

**04)** அவர்களது பௌடரையும் ஒல்லாந்தர் காலத்து அழுக்கு நிரம்பிய சீப் பையும் பாவிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை எனக் கூறல்.

" நேற்று வாங்கிய புத்தம் புது மணச்சவர்க்காரத்தை இன்று காணவில்லை. ஒருவேளை எலிஸாவுக்கு கொண்டு போய்ச் சேர்க்காவிட்டால் முகத்தைத் திருப்பிக் கொள்ளுமோ" எனல்,
எலிகளுக்கும் அவனுக்குமிடையே யுத்தப் பிரகடணம் நேற்றிரவு ஏற்பட்டுவிட்டது எனல்.
காரின் மோசமான நிலையை எடுத்துரைக்க, "இந்நாடு இறக்குமதி செய்த முதல் மூன்று கார்களுள் இதுவும் ஒன்றாக இருந்திருக்கும் எனல்.
கர்ணனுக்குக் கிடைத்த நாகாஸ்த்திரத்தை ஒத்த எலிப்பொறி எனத்தடவிப் பார்த்தான்" எனல்.
வரைபடத்தில் இருந்த அவுஸ்ரேலியாக் கண்டத்தை ஞாபகப்படுத்தும் ஒரு கிழிசல் சட்டைப் பை இருக்கும் இடத்தில் தோன்றியிருந்தது எனல்.
"கறிச்சட்டியில் இருந்தவற்றைக் காலிபண்ணிய திருப்தியுடன் இவனை நிமிர்ந்து பார்த்து மியாவ் என்றது சனியன்" எனல்.
எலிப்பொறியில் வைக்கப்பட்ட உணவு உண்ணப்படாமைக்கு காரணம் " எலிகள் எல்லாம் சைவத்தை தழுவி விட்டனவா?" எனல்.

**05)** **வறுமை**

பணம் கேட்டு வருபவர்களிடம் பஞ்சத்தை சொல்லி உதவி கேட்க வேண்டிய நிலை
நிஷ்தார் கொடுத்த பணம் தேநீரிற்கும், பற்றிசுக்குமே போதுமானதாக இருந்ததால் பசிக்களையுடன் வீடு செல்லும் நிலை
குடும்பத்தில் பொருளாதாரத்துண்டு விழலால் அடிக்கடி ஏற்படும் முகமுறிவுகள்.
திருமண வீட்டுக்குச் செல்லப் பணமில்லாததால் குடும்பத்தில் ஏற்படும் முரண்பாடு மூலம்
பஞ்சத்தில் அடிபட்ட போஸ்ட் பியோன் என்று தன்னைத் தானே குறிப்பிடல்.

**குற்ற உணர்வு**

கடிதம் இருக்கா என்று மைமூன் கிழவி கேட்ட போது பாம்பை மிதித்துவிட்ட பயமும் கலக்கமும் ஏற்பட்டது என்று கூறுவதன் மூலம்
" கிழவியும் பாத்தும்மாவும் மனக்கண்ணில் நிர்தாட்சண்யமாக நிழலாடினர்" என மனப்போராட்டத்தை வெளிப்படுத்துவதன் மூலம்

யார் மனத்தில் பூரிப்பின் முத்திரையைப் பதிப்பது என்று அவலப்படுவதன் மூலம்
''உணர்வுகளின் ஆர்ப்பரிப்பில் ஆன்மா அழுந்தித்துடித்தது. குற்ற உணர்வும், குறுகுறுக்கும் நெஞ்சோடும் இனி என்னால் ஊர் உலாப் போகமுடியாது. என்ற கூற்றின் மூலம்
இரவு உணவு உண்ணமுடியாத, உள்ளத்தில் புயல் அடிக்கும் நிலை.
நித்திரை கொள்ளமுடியாதபடி இரவு முழுவதும் கிழவியின் புலம்பலே மீண்டும் மீண்டும் நினைவுக்கு வருதல்.

**06)** 1. அறிஞர்களின் கருத்துக்களை மேற்கோள்காட்டல்
2. நூல்களிலிருந்து ஆதாரம் காட்டுதல்
3. நடைமுறை வாழ்விலிருந்து உதாரணம் காட்டுதல்
4. வன்மை, மென்மையான விடயங்களை அருகருகே வைத்து விளக்குதல்.
5. தேவைக்கேற்ப உரையாடல் வடிவில் கருத்துக்களைக் கூறுதல்

**07)** இலக்குமணனின் குணவியல்பு
1. அண்ணனின் கட்டளையை ஏற்றுநடப்பவன்
2. பெண்கள் எதிரே வந்தால் வெட்கமடைந்து, தலைகுனிந்து நிற்பவன், பெண்கள் நிற்கும் வழியிற் செல்லாதவன்.
3. தாரையின் விதவைக் கோலம் கண்டு தாயாரை நினைத்து வருந்தும் பண்பு.

**தாரையின் மதிநுட்பம்**
1. அனுமனின் ஆலோசனை பொருத்தமானதென ஏற்று வானர மகளிருடன் இலக்குமணனை வழிமறித்தமை
2. இலக்குமணனைப் புகழ்ந்து பேசிக் கோபத்தைத் தீர்க்க முயன்றமை
3. ''நின்றசேனை வீரர்'' என்று வானரப்படைகளை இலக்குமணனின் படைகளாக கூறுதல்.
4. ''ஆழிவேந்தன் அடியினை பிரிகிலாதாய்'' என்று சகோதர பாசத்தைத் தூண்டிக் கோபத்தைத் தணிக்க முயலுதல்.
5. உன்வரவால் நன்மைகள் கிடைக்கப்பெற்றன எனக்கூறித் தீமை செய்யாமல் தடுக்கமுயன்றமை.

Education
கல்வி
අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page